59

தாரண ஹு
கார்த்திகை-மார்கழி மீ

ஸ்ரீ:

ஸம்புடம் - 3
ஸஞ்சிகை 12

December 1944

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

13

9 - JAN 1944 MADRAS

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

"அஹோபிலே காருடசைலமத்யே க்ருபாவசாத் கல்பித ஸந்நிதாநம் |
லக்ஷ்ம்யா ஸமாலிங்கித வாமபாகம் லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ||"

		பக்கம்
விஷய ஸூசிகை :—1.	ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்	269
2.	ஸ்வப்நத்தின் தத்வம்	271
3.	ஸ்ரீ அத்திப்பட்டு அழகிய சிங்கர் ப்ரபாவம்... ...	273
5.	செய்திகள்	275

ஸ்ரீ:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

[4-ஆம் அங்கம்]

[ஸ்ரீ. உப. அன்பில் வி. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A.,B.L.,
அட்வோகேட், திருச்சி]

[ஸம்புடம் 3, ஸஞ்சிகை 10, பக்கம் 255-ன் தொடர்ச்சி]

இப்படி நம் துர்மதி ராணியின் ஊழியக்காரிகளான அஸூயை ஈர்ஷ்யை என்னும் இரண்டு பெண்களின் ஆஜ்ஞைக்குக் கட்டுப்பட்டு இந்த ஜகத்தே நம் ராணி வசத்தில் நிற்கிறது. [அஸூயை என்பது பிறர் குணங்களையும் தோஷமாகக் காட்டப் பார்ப்பது; ஈர்ஷ்யை என்பது பிறர் ஏற்றத்தை ஸஹியாத பொருமைக் காய்ச்சலும், அதையிட்டு த்[illegible]ன் பத்ந்யாதிகள் விஷயமாய்ப் பிறரிடம் ஸந்தேஹத்தினால் வரும் ஸம்சயத் [illegible]யையும் அஸூயையும் ஒரு பாணிநி ஸூத்ரத்தில் சேர்ந்து படிக்கப்பட் [illegible] எரிச்சலுக்குக் கிளைகள். அஸூயை ஐந்தாவது அங்கத்தில் வரு [illegible]ஹருடைய படையில் எல்லோருக்கும் பரம மைத்ரீ; ஒருவர்க் [illegible] கிடையாது. லோபன் தன் பத்நியைப் புகழ்வதுபோல, அஸூயை [illegible] புகழ்கிறான்.

[illegible]श स्थपुटयन्ति विश्वंभरां पठन्ति धनिनां चटून् परपरिच्छदं बिभ्रति ।
[illegible]च प्लवैः समरमारभन्ते मुधा दुरन्तधनदोहलग्रहिलचेतसो देहिनः

JL
இ22ண211/5141.
M44·3·12.
2/0132

பூமி த்ருஷ்ணை அஸூயை ஈர்ஷ்யை இவர்கள் ப்ரபாவத்தைப் பேசினான். இங்கே தன்னையும் தன் பத்நியையும் சேர்த்துத் தங்கள் ப்ரபாவத்தைப் பேசுகிறான். எல்லையற்ற தந வேட்கைப் பேய் பிடித்த மனத்தராய்ப் படுவதும் படுத்துவதுமான பாடுகளைக் கேட்டீர். பத்துத் திக்குகளிலும் ஓரிடம் பாக்கியில்லாமல் அடநம் செய்கிறார்கள்.

> 'உத்பதந்நபி சாகாஶம் விஶந்நபி ரஸாதலம் ।
> அடந்நபி மஹீம் க்ருத்ஸ்நாம் நாஸ்ய ஶேஷோ'வதிஷ்டதே ॥"

என்று லக்ஷ்மணருக்கு ராமன் ஸாதித்த ஶ்லோகம் இங்கே ஸ்வாமி நெஞ்சில் உளது. அதில் ஒரு சமத்காரம். ராமாயண ஶ்லோகத்தில், 'மேலே ஆகாசத்தில் கிளம்பி ஸஞ்சரித்தும், கீழே பாதாளத்திற்குள் புகுந்து திரிந்தும், பூமி முழுவதும் அடநம் செய்தும், கொடுத்து வைத்ததற்கு மேல் கிடையாது' என்று மூன்று அடிகளால் சொன்னதைப் 'பத்துத் திக்குகளிலும் அடநம் செய்கிறான்' என்று ஓரடியால் ஸங்க்ரஹிக்கிறார். பூமியில் எட்டுத் திக்குகளிலும் அலைவது. மேல் என்பது ஆகாசம். கீழ் என்பது பாதாளம். இப்படிப் பத்துத் திக்கிற்குள், ஆகாசம் பாதாளம் பூமி இவை மூன்றும் அடங்கிவிட்டன. 'அடந்' என்று அந்த ஶ்லோகத்தின் வ்யஞ்ஜநம். 'ஶகடாநி விஶ்வம்பராம்'. இவர்கள் சரக்கு வண்டிகளை வ்யாபார முறையில் பூமியில் எல்லா ரஸ்தாக்களிலும் கொண்டுபோய் மேடு பள்ளங்க ளாக்கி ஒரே நொடியாகச் செய்து ஸஞ்சரிக்கவிடாமல் செய்துவிடுகிறார்கள். யுத்தத்தில் மார்க்கங்களை மேடு பள்ளமாக்கிப் பாழாக்குவது இம்மஹாயுத்தத்தில் ஸஹஜமா யிருக்கிறது. ரஸ்தாக்கள் தேசம் முழுவதிலும் நன்றாயிருக்கவேண்டுவது முக்யமான ராஜநீதி. எல்லா ப்ரஜைகளையும் அவர்கள் வீடுகள் முதலியவற்றையும் தாங்கும் விஶ்வம்பரையையே இப்படி மேடு பள்ளம் செய்கிறார்கள். 'வந்தி யதி நாம வடுபிர்' பணக்காரர்களுக்குத் துதிப்பாட்டுக்கள் கல்பித்துப் பாடுகிறார்கள். அவர்கள் ப்ரீதிக்காகப் பொய்த் துதிப்பாட்டுகள் இட்டுக் கட்டிப் பாடுவர். இந்த இச்சகப் பாட்டுப் பேச்சுகளுக்குச் 'சாடு' என்றும் 'சடு' என்றும் பெயர். 'சடு' என்கிற ஹ்ரஸ்வப் பெயரை யெடுத்ததில் ரஸங்கள் உண்டு. பாடுகிறவர்கள் எத்தனை நீட்டிச் சாடு பாடினாலும், அதை ஹ்ரஸ்வமாகவே (குறைந்த மாத்ரையாகவே) அந்த ப்ரபுக்கள் எண்ணுகிறார்கள் என்றோர் ரஸம். 'சடு' என்று வயிற்றுக்கும் பெயர். வயிற்றுக்காக இப்படி மனிசரைப் பாடுகிறார்கள். மூளை யெல்லாம் செலவிட்டும், தினம் தினம் புதுப்புது கல்பனை செய்து கவிகட்டித் தொண்டைபோக நீட்டிப் பாடியும், அவர்கள் அதை நீளம் போதாததாக எண்ணுகின்றனர். சந்தம் சேர்வதற்காகச் 'சடு' என்று மாத்ரைக் குறைவாகப் படிப்பதிலும் இத்தனை ரஸ முளது. ஏன் கவி ஸிம்ஹ மென்று நம் ஸ்வாமியைத் தைவமும் உலகும் கொண்டாடாது? 'பரவர ஸிம்ஹம் பிப்ரதி'. ப்ரபுவின் சிஹ்நங்களை உடலிலும் ஆடையிலும் ஊழியக்காரராய்த் தரிக்கிறார்கள். ஈஶ்வரனாகிய பரன் திருவாயுத சிந்ஹங்களைத் தரிக்கவேண்டியிருக்க, இப்படி மானிட ப்ரபுவின் சிந்ஹங்களைச் சுமக்கிறார்கள் என்று 'பர' சப்தத்தின் ரஸம். சிஹ்நம் தரிப்பது அடிமைப் பட்டதற்கு அடையாளம். 'தரந்தி ஜலதிம் ப்லவை:' கப்பல்களால் ஸமுத்ரத்தைத் தாண்டுகிறார்கள். 'ப்லவை:' என்பதைப் பின்பும் அந்வயிக்கலாம். 'ஸமராரம்பணே நிர்பயா:'. நிஷ்காரணமாய்ப் போர் தொடங்குகிறார்கள். சண்டை செய்வதின் பயனும் வீணே. இரண்டு கக்ஷிப் படைகளும் ப்ராயேண முடிவதே முடிவாகும். மஹாபாரதம் இதைக் காட்டுகிறது. ஜயித்தவர்களுக்கும் தோற்றவர்களுக்கும் ஸர்வ நாசமே மிச்சம். 'ப்லவை:' என்பதைப் பின்பும் சேர்த்துக்கொண்டு, 'கப்பல்களைக் கொண்டு கப்பற் சண்டைகளும் புரிகிறார்கள்' என்று பொருள் கூடும். ஆகாச ப்லவங்களைக் கொண்டும் அங்கும் போர். 'ஆஶார்ணவஸ்ய நாந்த:' ஸமுத்ரத்திற்கும் கரையைக் கண்டு தாண்டுகிறார்கள். ஆசைக் கடலிற்கு அந்த மில்லை. அதைத் தாண்டவே முடியாதென்பது ரஸம்.

வஸந்தன்:—மஹாமோஹ மந்த்ரி வர்யரே! த்ருஷ்ணையோடு கூடிய நீ அர்த்த மென்னும் புருஷார்த்தத்தைப் பற்றி உலகத்தின் மனத்தைக் கவர்பவன். உன் ஜயத்தை யார் தடுக்கவல்லார்? தர்மம், அர்த்தம், காமம் என்னும் த்ரிவர்க்கத்தின் நடுவில் உன் புருஷார்த்தமான அர்த்தம் நின்றுகொண்டு, முன்னான தர்மத்தையும் பின்னான காமத்தையும் ஸாதிக்க வல்லது. நடுப் புருஷார்த்தம் மற்ற இரண்டையும் ஸாதிக்கவல்லது. பணம் ஸந்தோஷமும் இன்பமும் தரும். இது உலகத்திற் கெல்லாம் அநுபவஸித்தம். ப்ரத்யக்ஷ ஸித்தத்திற்கு என்ன ஸாக்ஷி வேணும்? எல்லோர் மனமே ஸ்வாநுபவத்தால் அறிந்ததே. அர்த்த சாஸ்த்ரம் தானே எல்லா ராஜாக்களும் கற்று நடத்தவேண்டியது. காமஸூக்தத்தையே போற்றி இன்புற விரும்பி வாத்ஸ்யாயந காமதந்த்ரத்தைப் படித்து ந்யாயமாயும் அந்யாயமாயும் ஸ்த்ரீ போகத்தி லிழிபவர்க்கும், உன் புருஷார்த்தமான தர்மத்தைத்தானே சேர்க்கவேணும். மற்ற புருஷார்த்தங்களுக்கு அர்த்த மென்ற பெயர் இல்லையே. [தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்வப்நத்தின் தத்வம்.

2/10/32

[ஸ்ரீ உப. ஸ்ரீ வாஸுதேவாசார்யர், சென்னை.]

ஸ்வப்நத்தின் தத்வத்தைப் பற்றி நமது ஶாஸ்த்ரம் சொல்வதாவது :—ஸ்வப்நத்தில் நாம் காணும் பதார்த்தங்க ளெல்லாம் ஸர்வேஶ்வரனாலேயே ஸ்ருஷ்டிக்கப்படுகின்றன. ஜாக்ரத் தஶையில் ஈஶ்வரன் ஜீவன்களுக்கு அவரவர் கர்மாநுகுணமாக ஸுகதுக்க ரூபமான பலத்தைக் கொடுப்பதுபோல், ஸ்வப்ந தஶையிலும் அந்த ஸர்வேஶ்வரனே ஜீவன்களுக்கு அவரவர்களுடைய வேறு சில அல்பங்களான கர்மங்களை உத்தேசித்து ஸுக துக்க ரூபமான பலத்தைக் கொடுக்கிறான்; பாபிஷ்டன் துஸ்ஸ்வப்நத்தையும் ஸுக்ருதி ஸுஸ்வப்நத்தையும் காண்கிறான். ஜாக்ரத் தஶையில் நமக்குக் கிடைக்கவேண்டிய சில ஶுபாஶுபங்கள் சிற்சில ப்ரதிபந்தகாதிகளால் தடைப்படுவது உண்டு. அவைகளை நாம் ஸ்வப்ந காலத்தில் ஸுஸ்வப்ந ரூபமாகவும் துஸ்ஸ்வப்ந ரூபமாகவும் அநுபவிக்கிறோம். ஆகையால் ஸ்வாப்ந ஸ்ருஷ்டி முழுவதும் ஸர்வேஶ்வரனுடைய கார்யமே. அப்படி அந்த ஸ்ருஷ்டி ஸர்வேஶ்வரனுடைய கார்யமாக இருப்பதால், அதில் காணப்படும் பதார்த்தங்க ளெல்லாம் பரமார்த்தங்களே. 'ஸ்வப்நத்தில் அஸம்பாவிதங்களான சில விசித்ர பதார்த்தங்கள் தென்படுகின்றனவே; அவை எப்படி பரமார்த்தங்க ளாகக்கூடு' மென்றால் :—அசிந்த்ய ஶக்தியை யுடைய ஸர்வேஶ்வர ஸ்ருஷ்டியில் ஸாத்யமற்றது ஒன்றுமில்லை யாதலால், அவைகளும் ஸத்யங்க ளென்றே நாம் ஒத்துக்கொள்ளவேண்டும். இந்தப் பதார்த்தங்களை நாம் அநுபவிக்கும்பொருட்டு ஸ்வப்ந காலத்தில் நமக்குப் புதிய ஒரு தேஹத்தை ஈஶ்வரன் ஸ்ருஷ்டித்துக் கொடுக்கிறா னென்றும் அந்தப் புதிய தேஹங்களில் நாம் ப்ரவேஶித்து அவ்விடத்தில் ஸஞ்சாராதிகளைச் செய்து பிறகு நமது தேஹத்திற்குத் திரும்பி வருகிறோ மென்றும் நமது ஶாஸ்த்ரஜ்ஞர்கள் சொல்லுகின்றார்கள். ஆனால், ஜாக்ரத் தஶையில் ஸ்ருஷ்டிக்கப்படும் பதார்த்தங்களுக்கும் ஸ்வாப்ந பதார்த்தங்களுக்கும் ஒரு வாசி உண்டு. ஜாக்ரத் தஶா பதார்த்தங்கள் ஒரு வ்யக்தியால் மாத்ரம் அநுபவிக்கத் தகுந்தவை யல்ல; அநேக வ்யக்திகளுக்கு அநுபாவ்யங்கள் : அந்தந்தக் காலத்தில் மாத்ரம் அநுபவிக்கத் தகுந்தவையு மல்ல. ஸ்வாப்ந பதார்த்தங்களோ ஏக வ்யக்தியால் மாத்ரம் அநுபாவ்யங்கள்; தத்தத் காலமாத்ர அநுபாவ்யங்கள். இப்படியும் ஒரு ஸ்ருஷ்டி ஸம்பாவிதமோ வென்றால், அசிந்த்ய ஶக்தியை யுடைய ஸர்வேஶ்வரன் விஷயத்தில் எது அஸம்பாவிதம் என்பதே ஸமாதாநம்.

ஸ்வப்நத்தைப் பற்றிய விசாரத்தை ப்ருஹதாரண்யகோபநிஷத் ஆறாவது அத்யாயத்தில் விஸ்தாரமாகக் காணலாம். ஒரு ஸமயத்தில் ஜநக மஹாராஜனுடைய ஸதஸ்ஸுக்கு யாஜ்ஞ்யவல்க்ய மஹர்ஷி சென்றார். அப்பொழுது அந்த மஹாராஜன் மஹர்ஷியைப் பார்த்து, 'ஓ மஹர்ஷியே! இந்த ஜீவன், ஸூர்யன் சந்த்ரன் அக்நி முதலிய ப்ரகாஶகங்களான ஸாதநங்கள் ஒன்று மிராமலிருக்கும் ஸ்வப்ந தஶையில், எந்த ஜ்யோதிஸ்ஸைக் கொண்டு தனது ஸ்திதி கமநாதிகளை ஸாதித்துக் கொள்ளுகிறான்?' என்று கேட்டார். அதாவது :—'நமது இந்த்ரியங்க ளெல்லாம் உபரதங்களாயும் ஸூர்யன் முதலிய ஜ்யோதிர்கணங்கள் நஷ்டங்களாயு மிருக்கும் உறக்கத்தில் நமது போக்குவரத்து முதலிய வ்யாபாரங்களுக்கு ஸாதநமாயிருக்கும் ஜ்யோதிஸ் எது?' என்பது அவர் கருத்து. இதற்கு ஸமாதாநமாக மஹர்ஷி சொன்னதாவது :—

"आत्मैवास्य ज्योतिर्भवति। आत्मनैवायं ज्योतिषाऽऽस्ते पल्ययते कर्म कुरुते विपल्येति" इति

[ஆத்மாவே தனது தர்மபூதமா யிருக்கும் ஜ்ஞாநத்தால் தானே தனக்கு ப்ரகாஶகனாகிறான். அதை அவலம்பித்தே அவன் நிற்கிறான்; சுற்றிவருகிறான்; கார்யங்களைச் செய்கிறான். திரும்பிப் போகிறான்.]

"स हि स्वप्नो भूत्वेमं लोकमतिक्रामति"

[அந்த ஜீவன் ஸ்வப்நாவஸ்தையில் புலி முதலியவைகளின் ஶரீரத்தைப் பெற்று, ஜாக்ரதவஸ்தையில் தனக்கு விளங்கிய ப்ரபஞ்சத்தையும் ஸம்ஸாரத்தில் அநுபவிக்கப்படும் துக்கங்களையும் பார்க்கிறா னில்லை.] **[स्वप्नो भूत्वा = स्वप्नावस्थो भूत्वा)**

"तस्य वा एतस्य पुरुषस्य द्वे एव स्थाने भवत इदञ्च परलोकस्थानञ्च। सन्ध्यं तृतीयँ स्वप्नस्थानम्" [ஶரீரம் பரிக்ரஹிக்கும் விஷயத்தில் ஜீவனுக்கு இந்த லோகம் பரலோகம் ஆக இரண்டு இடங்க ளுண்டென்று லோகத்தில் ப்ரஸித்தம். ஆனால், 'ஸந்த்யம்' என்று அவனுக்கு மூன்றாவது ஸ்தாநமு மொன்று உண்டு. அதிலும் அவன் ஒரு ஶரீரத்தைப் பரிக்ரஹிக்கிறான். அது கீழ்க் கூறப்பட்டுள்ள இரண்டு ஸ்தாநங்களுடைய அநுபவத்திற்கும் யோக்யமாக இருக்கிறபடியால் அதற்கு 'ஸந்த்யம்' என்று பெயர். **[सन्धौ भवं सन्ध्यम्]**

“यथाक्रमोऽयं परलोकस्थानं भवति तमाक्रममाक्रम्योभयान् पाप्मन आनन्दांश्च पश्यति”

[பரலோகத்தில் தனது பூர்வ கர்மங்களுக்குத் தக்கவாறு ஸுக துக்கங்களை அநுபவிப்பதுபோல, ஸ்வப்நாவஸ்தையிலும் ப்ரதிகூல அநுகூல பதார்த்தங்களை அநுபவிக்கிறான்.]

“न तत्र रथा न रथयोगा न पन्थानो भवन्ति । अथ रथान् रथयोगान् पथः सृजते न तत्र वेशान्ताः पुष्करिण्यः स्रवन्त्यो भवन्ति । अथ वेशान्ताः पुष्करिण्यः स्रवन्त्यः सृजते । स हि कर्ता ॥”

[அவ்விடத்தில், ஜாக்ரத் தசையில் தென்படும் ரதங்கள் குதிரைகள் மார்க்கங்கள் போன்ற ரதம் முதலியவை இல்லை; அவைகளைக் காட்டிலும் விலக்ஷணமான ரதம் முதலியவை தென்படுகின்றன. அவ்விடத்தில் இங்குத் தென்படும் பல்வலங்கள் புஷ்கரிணிகள் நதிகள் போன்ற பல்வலம் முதலியவை இல்லை; அவைகளைக் காட்டிலும் விலக்ஷணமான பல்வலம் முதலியவை தென்படுகின்றன. அவனன்றோ அவைகளை ஸ்ருஷ்டிக்கிறவன்?]

இந்த விஷயத்தை ஸ்ரீ வ்யாஸ பகவான் தமது ப்ரஹ்ம மீமாம்ஸையில் மூன்றாவது அத்யாயம் இரண்டாவது பாதத்தில் ஸந்த்யாதிகரணம் என்னும் அதிகரணத்தில் விசாரித்திருக்கிறார். முதல் இரண்டு ஸூத்ரங்களால் ‘ஸ்வாப்ந பதார்த்தங்களின் ஸ்ருஷ்டி முழுவதும் ஜீவனாலேயே செய்யப்படுகின்றதோ’ என்னும் பூர்வபக்ஷத்தை ப்ரஸ்தாவித்து, அடுத்து வரும் நாலு ஸூத்ரங்களால் ‘ஜீவாத்மாவுக்கு இம்மாதிரி ஸ்ருஷ்டியைச் செய்வதற்கு அபேக்ஷிதமான ஸத்ய ஸங்கல்பத்வம் முதலியவை ஸ்வாபாவிகமாக இருந்தாலும், அவை ஸம்ஸார தசையில் திரோஹிதங்களா யிருக்கிறபடியாலும், இம்மாதிரியான விசித்ர ஸ்ருஷ்டியைச் செய்வதற்கு அசிந்த்ய சக்தியை யுடைய பரமாத்மாவே சக்தனாயிருக்கிறபடியாலும், அந்தப் பரமாத்மாவே இந்த ஸ்ருஷ்டிக்குக் கர்த்தா’ என்று ஸ்ரீவ்யாஸ பகவான் அவ்விடத்தில் ஸித்தாந்தம் செய்திருக்கிறார். ‘அவனன்றோ கர்த்தா’ என்னும் உபநிஷத் வாக்யம் ஸ்ருஷ்டி கர்த்தாவின் மாஹாத்ம்யத்தை ஸூசிப்பிக்கிறதன்றோ? “இது ஸூத்ரகாரருடைய அபிப்ராயமென்று எப்படிச் சொல்லலாம்? ‘இந்த ஸ்ருஷ்டி மாயையே’ “**मायामात्रन्तु कार्त्स्न्येनानभिव्यक्तस्वरूपत्वात्**” என்று அங்குத் தென்படும் ஒரு ஸூத்ரத்தில் வ்யவஹரிக்கப்பட் டிருக்கின்றதே. ‘மாயை’ என்பதற்குப் ‘பொய்’ என்பது பொருளன்றோ? புராணங்களிலும் ஸாமாந்ய ஜநங்களின் ப்ரயோகங்களிலும் அந்த சப்தம் ‘பொய்’ என்னும் அர்த்தத்திலேயே ப்ரயோகம் செய்யப்பட்டிருப்பதாகக் காணப்படவில்லையா?” இம்மாதிரி ஒரு சங்கை ஜநிக்கலாம். இதற்கு ஸமாதாநம் :—“மாயை என்னும் சப்தத்திற்குப் ‘பொய்’ என்னும் பொருள் கௌண வ்ருத்தியே தவிர முக்ய வ்ருத்தியன்று. அது ஸத்யார்த்தத்திலேயே முக்ய வ்ருத்தி உள்ளது. ஆச்சர்ய பூதமான கார்ய விசேஷமே ‘மாயை’ என்று சொல்லப்படும். “**जनकस्य कुले जाता देवमायेव निर्मिता**” “**विष्णोर्विचित्राः प्रभवन्ति मायाः**” என்னும் ப்ரயோகங்கள் இதற்கு ப்ரமாணம்.” “**माया तु वयुनं ज्ञानम्**” என்பது நிகண்டு. ஆகையால், இவ்விடத்தில் தென்படும் ‘மாயா மாத்ரம்’ என்பதற்கு ‘ஆச்சர்ய ரூபமே; அநாச்சர்ய ரூபமாக ஒன்றுமில்லை’ என்பதே பொருள். இந்த விஷயம் இந்தப் பாதத்தில் விசாரிக்கப்படுவதும் கவனிக்கத்தகுந்தது. இந்த அத்யாயத்தின் முதல்பாதம் ஜீவனுடைய தோஷ சிந்தநத்தை விஷயமாக உடையது; இரண்டாவது பாதம் நிர்த்தோஷமான ப்ரஹ்மத்தின் மாஹாத்ம்யத்தை விஷயமாக உடையது. ஆகையால் ஜீவனுடைய ஸ்வப்நாவஸ்தையின் விசாரம் முதல் பாதத்திலேயே செய்யப்படவேண்டும். அதை விட்டு விட்டு அந்த விசாரத்தை ப்ரஹ்ம மாஹாத்ம்ய ப்ரதிபாதகமான இரண்டாவது பாதத்தில் செய்வதன் கருத்து, இது ஜீவ ஸ்வப்நாத்யவஸ்தா சிந்தநமாக இருந்தாலும், ப்ரஹ்மத்தின் மாஹாத்ம்யத்தை ப்ரதிபாதிப்பதிலேயே பர்யவஸாநமுள்ளது என்பதை விளக்கவேண்டுமென்பதன்றோ?

‘ஸ்வப்நம் பொய்யன்று; பரமார்த்தமே’ என்று சொல்வதற்கு மற்றுமொரு ஆக்ஷேபத்தைச் சிலர் செய்வார்கள். “ஒரே இடத்தில் நாம் படுத்து உறங்குகையில், அந்த ஸ்தலத்தை விட்டு ஸ்தலாந்தரத்திற்குப் போவதாகக் காண்கிறோம்; இது எவ்விதத்தில் பரமார்த்தமாகும்? புதிய தேஹமொன்றை ஈச்வரன் ஸ்ருஷ்டிக்கிறானென்றும், ஜீவன் தனது தேஹத்தை விட்டுவிட்டு அந்தப் புதிய தேஹத்தில் புகுந்து அதனுடன் ஸஞ்சரிக்கிறான் என்பதும் உண்மையானால், ஜீவனால் விடப்பட்ட பழைய தேஹம் ம்ருத சரீரமாகவேண்டாமோ? அந்தத் தேஹத்தில் ச்வாஸம் அநுவர்த்தித்து நிற்பதைப் பார்க்கிறோமே. அது, ஜீவன் அந்தத் தேஹத்திலேயே இருக்கிறான் என்பதற்குப் போதுமான லிங்கமன்றோ?” என்பதுதான் அந்த ஆக்ஷேபம். இதற்கு இரண்டு ப்ரகாரமாக நமது ஆசார்யர்கள் ஸமாதாநம் கூறியிருக்கிறார்கள். முதலாவது :— ஒருவன், ஸ்வக்ருஹத்திலும் பரக்ருஹத்திலும் ஸ்வைர ஸஞ்சாரம் செய்வதுபோல் தனது யோக மஹிமையால் ஒரு தேஹத்தை விட்டு மற்றொரு தேஹத்தில் ப்ரவேசித்து அந்தத் தேஹத்துடன் ஸஞ்சரிக்கிறானன்றோ? இப்படியே

Supplement to this issue

				ரூ.	அ.

1942 - 43-ம் ஆண்டுகளின் சந்தா வஸுலில்

640	ஸ்ரீ.	C. க்ருஷ்ணமாசார்யர், பார்க் டௌன், சென்னை	...	6	0

1944 - நவம்பர் மாஸத்தில் சந்தா வரவு.

33	,,	M. K. ரங்கஸ்வாமி ஐயங்கார். மன்னார்குடி	...	3	0
37	,,	V. ராஜகோபாலாசார்யர், காஞ்சீபுரம்	...	3	0
139	,,	B. M. துரைஸ்வாமி ஐயங்கார், ஒலக்கூர்	...	3	0
165	,,	வாத்யார் N. ஸ்ரீநிவாஸையங்கார், ஸ்ரீரங்கம்	...	3	0
225	,,	A. மாதவையங்கார், பெங்களூர்	...	3	0
272	,,	V. T. தேசிகாசார்யர், திருநெல்வேலி	...	3	0
414	,	K. D. ராஜகோபால ஐயங்கார், சிதம்பரம்	...	3	0

[P.T.O.]

				ரூ.	அ.
429	,,	A. ஸ்ரீநிவாஸராகவாசார்யர், திருப்பாப்புலியூர்	...	3	0
443	,,	P. N. சேஷையங்கார், ஸ்ரீரங்கம்	...	3	0
454	,,	P. நரஸிம்ஹாசார்யர், P. T. மதராஸ்	...	3	0
639	,,	ஜாநகிராம் பிள்ளை, லக்ஷ்மிகுடி	...	3	0
640	,,	C. க்ருஷ்ணமாசாரியர், பார்க் டௌன், சென்னை	...	3	0
641	,,	நீலாம்பூர் குப்புஸ்வாமி ஐயங்கார், கோயம்புத்தூர்	...	3	0

1945-ம் ஆண்டுச் சந்தா வஸூல்.

225	,,	A. மாதவையங்கார், பெங்களூர்	...	3	0
454	,,	P. நரஸிம்ஹாசார்யர், P. T. மதராஸ்	...	3	0
475	,,	சேட்லூர் ஸ்ரீநிவாஸராகவாசார்யர், தூசி	...	3	0
623	,,	சேட்லூர் N. R. ராஜகோபாலாசார்யர், கோயம்புத்தூர்	...	3	0

ஸ்வப்ந தசையின் வ்ருத்தாந்த ஸ்திதியும். பழைய தேஹத்தில் ஶ்வாஸம் அநுவர்த்தித்து நிற்பது ஜீவன் அவ்விடத்தில் இருக்கிறான் என்பதற்குப் போதுமான லிங்கமன்று. இவ்வாறு முதல் கக்ஷிக்காரர்கள் நிர்வஹிக்கிறார்கள். இரண்டாவது கக்ஷிக்காரர்கள் சொல்வதாவது :—பழைய தேஹத்தை ஜீவன் விடாமலே, விபுவான தனது தர்மபூத ஜ்ஞாநத்தால் யோகபலத்தைக் கொண்டு புதிய தேஹத்தில் வ்யாபித்து, அந்தத் தேஹத்துடன் போகங்களை அநுபவிக்கக்கூடும் என்பதை நாம் புராணங்களிலிருந்து கேட்டிருக்கிறோம். ஸௌபரி என்னும் மஹர்ஷி தமது யோகப்ரபாவத்தால் ஐம்பது தேஹங்களை அதிஷ்டாநம் செய்துகொண்டு போகங்களை அநுபவித்தாரன்றோ?

“ कश्चिद्योगप्रभावान्निजपरभवनस्वैरसञ्चारनीत्या
निष्क्रान्तः पूर्वदेहाद्विशति परवपुः पूर्वमाप्नोति भूयः ।
इत्थं स्वप्नेऽप्युदन्तस्थितिरिति कतिचिच्छ्वासवृत्त्याऽन्यथाऽन्ये
चित्तोद्यद्धीप्रसूत्येतरतनुभजने सौभरिन्यायसिद्धेः ॥”

அம்மாதிரியே ஸ்வப்நத்திலும் தர்ம பூத ஜ்ஞாநத்தால் தேஹாந்தர வ்யாப்தி ஸம்பவிக்கின்றது. புதிய தேஹத்தை ஸ்ருஷ்டித்துக் கொடுத்த ஈஶ்வரன் இந்த ஶக்தியையும் கொடுக்கிறான். இதுதான் இவர்கள் சொல்லும் ஸமாதாநம்.

2/10/32

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ அத்திப்பட்டு அழகியசிங்கர் ப்ரபாவம்

ஸ்ரீ அழகியசிங்கரின் மற்றொரு மஹிமை

[ஸ்ரீமதி ராஜலக்ஷ்மி, பலவங்குடி, பெங்களூர்]

(ஸம்புடம் 3 ; ஸஞ்சிகை 11 ; பக்கம் 266-ன் தொடர்ச்சி)

சுமார் 50 - 60 வருஷங்களுக்கு முன் சென்னைப்பட்டணத்தில் ப்ரஸித்திபெற்ற கனவான் ஒருவர் இல்லத்தில் நடைபெற்ற விவாஹ மஹோத்ஸவம். அதன் சிறப்பைக் கண்டு களித்தவர்களே தந்யர்கள். அவ்வித பெருமைக்கு என்ன காரணம்? இக்காலத்தைப்போல் பாண்டு, மேளம், ஊர்வலம், பாட்டுக் கச்சேரி, சீட்டுக் கச்சேரி, காப்பிக் கடை, நகை, புடவை இவைகள்போன்ற சீர்சிறப்பன்று. அதன் வைபவம் வேறு. ஆழ்வார்கள் அருளிச்செயல்போல், ஹோமப் புகையும் வேத ஒலியும் நிறைந்த மஹோத்ஸவம். மங்களகரமாகிய வைஷ்ணவ ஸ்ரீ பொங்கிப் பொழிந்தது. அத்தனவான் தன் புத்ரியின் விவாஹத்தின் பொருட்டுச் சுற்று முற்றிலுமுள்ள க்ராமங்களிலிருந்து புகழோங்கிய பாகவதோத்தமர்களை வரவழைத்திருந்தார். விவாஹ மண்டபத்தில் சுமார் மூவாயிரம் ஸ்ரீ வைஷ்ணவர்கள் வந்து நிறைந்திருந்தனர். அவர்கள் திருமுகங்களில்தான் என்ன தேஜஸ்! எத்தகைய சாந்தம்! எங்கும் ஆநந்தமயம். ஸ்ரீதேவி தாண்டவமாடினாள். காணக் கண் கோடி வேண்டும் அவ்வத்புத ஸேவையை ஸேவிக்க.

“கண்டோம் கண்டோம் கண்டோம் கண்ணுக்கினியன கண்டோம்
தொண்டீ ரெல்லீரும் வாரீர் தொழுதுதொழுது நின்றார்த்தும்
வண்டார் தண்ணந்துழாயான் மாதவன் பூதங்கள் மண்மேல்
பண்டான் பாடிநின்றாடிப் பரந்து திரிகின்றனவே.”

என்று ஆழ்வார் உகந்து ஆநந்தித்த அழகிய காட்சிக்கே அதனை ஒப்பிடலாம்.

எழுந்தருளியிருந்த ஸ்வாமிகள் அனைவரும் வேதவித்துக்கள்; கநபாடிகள்; கவிஸிம்ஹங்கள்; தர்க்கப் புலிகள். இத்தகைய வைபவம் வாய்ந்த கோஷ்டியில் விவாஹ மங்களம் நிறைவேறித் தாம்பூலம் வழங்கும் தருணம். ஒரு பெரிய வித்வான், வேதத்தில் அபூர்வமான ஒரு பஞ்சாதியை உயர்ந்த குரலில் எடுத்து ஓத ஆரம்பித்தார். ஸபையில் நிஶ்ஶப்தம் குடிகொண்டது. மூவாயிரம் அந்தணர்களில், பத்துப் பன்னிரண்டு ஸ்வாமிகளே அவருடன் கலந்து கொண்டார்கள். மற்றவர்கள் மௌனமாய் நாணித் தலைகவிழ்ந்தனர். அதைக் கண்ட நம் மஹான் உள்ளம் கலங்கியது. ‘இவ்வழகிய மஹத் கோஷ்டியில் அனைவரும் சேர்ந்து ஓதினாலன்றோ வேத ஒலி ஆகாயத்தை அளாவும். ஸகல பாகவதோத்தமர்களும் ஒருமிக்க விவாஹ தம்பதிகளை வாழ்த்துவதல்லவோ உத்தமம்’ என்று எண்ணினார். உடனே, அவர் ஸாதாரணமாய் ஸகல ஜனங்களுக்கும் தெரிந்ததும், கல்யாண காலங்களில் ஓதவேண்டியதுமாகிய ஒரு பஞ்சாதியை எடுத்துக் கம்பீரமாய் ஸிம்ஹம் போல் கர்ஜித்தார். ஸபையில் மஹா ஜனங்களிடையே பரபரப்பும் ஆநந்தமும் ஆஶ்சர்ய

பழங்கள் குலுங்கப் பழுத்து வணங்கி நிற்கும் மரத்தைப் பலரும் பார்த்துக் கொண்டாடுகிறார்கள். மலட்டு மரம் ஓங்கித் தழைத்திருப்பினும் ஒருவரும் அதைத் தலையெடுத்துப் பார்ப்பதில்லை. நமது வாழ்க்கையிலும் அறிவு பழுத்து, அஹந்தை ஆடம்பரம் ஸ்வயநலம் முதலிய மலட்டுத்தன்மை நீங்கினால், நாம் பெரியோர்கள் அருளுக்குப் பாத்ரர்களாகிறோம். அதேபோல், வணங்கிநிற்கும் அந்தணரை அருகில் அழைத்து அன்பு ததும்பும் குரலில், "ஸ்வாமி! வருந்தவேண்டாம். சந்த்ரன் ஒரேவிதமாய் ப்ரகாசிப்பதில்லை. வாயுவும் ஒரே ஸமமாய் வீசுவதில்லை. வளர்வதும் தேய்வதும் ஸஹஜம். அன்றியும் உம்முடைய வேதாத்யயநம் மேன்மை பொருந்தியதே. நீர் கம்பீரமாய்க் காநம் செய்ததும் மநோஹரமாகவே இருந்தது. அதில் அணுவளவும் ஐயமில்லை. திவ்யப்ரபந்தம் மிகவும் சிறந்தது. அதில் "வாரண மாயிரம்" என்னும் நாச்சியார் திருமொழியை விவாஹ காலத்தில் பாடுகிறார்கள். அதே திவ்ய ப்ரபந்தத்திலிருந்து, "எய்தார் எய்தார் எய்தார்" "கொண்ட பெண்டிர் மக்களூற்றார்" "ஒருநாயகமாய்" என்னும் திருவாய்மொழிகளைப் பாடினால் நன்றாயிருக்குமா? அதுபோலவே யன்றித் தாழ்மை யொன்றுமில்லை. இதனால் உமக்கு ஒரு குறைவும் ஏற்படவில்லை" என்று பலவிதமாய் ஸமாதாநம் செய்தார். அப்பொழுது அம்மஹானின் கல்யாண குணங்களைக் கொண்டாடாதவர்களே இல்லை எனலாம். அப்பொழுதும் அவர் ஆநந்தக் கடலில் மூழ்கவில்லை. முன் துக்கத்தினால் வருந்தவு மில்லை. கம்பீர ஸ்வபாவமுடைய மஹா புருஷர்களுக்கு ஸந்தோஷம், துக்கம், மாநம், அவமாநம், செல்வம், தரித்திரம் ஸகலமும் ஸமம். ஸமுத்ரத்திலிருந்து மேஹங்கள் ஜலத்தை ஏராளமாக அருந்திச் செல்லுகின்றன. அப்பொழுது ஒரு திவலை ஜலம்கூடக் கடலில் குறைவதில்லை. மேகங்கள் மறுபடியும் தாங்கள் பருகிய தண்ணீரை மழையாய்ப் பொழியும்போதும் கடல் கரை புரண்டு வருவதில்லை. எதையும் லக்ஷ்யம் செய்வதில்லை. இத்தகைய குணத்தை ஒத்தது நம்மஹானின் ஸமசித்தம். இவைபோன்ற அநேகம் ஆஶ்சர்ய சரிதங்கள் பல உண்டு. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறே பதம். தங்கக் கட்டியின் மாற்றை அறியக் கட்டி முழுவதும் உறைத்துப் பார்ப்பதில்லை யல்லவா? ஸத்துக்களின் ப்ரபாவம் தழைத்தோங்குவதில் ஆச்சர்ய மென்ன? இத்தகைய மஹிமை வாய்ந்த மஹானைத் தேர்ந்தெடுத்து மடாதிபதியாய்ப் பட்டம் கட்டினார்கள். [தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

செய்திகள்

(1)

ஸ்ரீரங்கத்தில் நடந்த உபந்யாஸங்கள்.

ஸ்ரீமதஹோபில மட ஸிம்ஹாஸனாரூடராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அழகிய சிங்கர், நமது தேசத்தில் ஸகல ஜநங்களுக்கும் வைதிக மதாசாரங்களில் அதிகமான ஶ்ரத்தையை உண்டாக்கவேணுமென்று திருவுள்ளம்பற்றி, ஏற்கெனவே நியமித்து இருந்ததை அநுஸரித்து, மேற்படி மடத்து வித்வாந் புத்தங்கோட்டகம் ஸ்ரீ. உ. வே. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியை, நமது தேசத்தில் யதா ஸௌகர்யம் ஆங்காங்குப் போய் வைதிக மதாசார விஷயங்களையும் முக்யமாய் விசிஷ்டாத்வைத மஹிமையையும் ஸ்ரீ ஸந்நிதி மஹிமையையும்பற்றி உபந்யஸிக்கும்படி நியமித்ததின் பேரில், ஷை ஸ்வாமி ஸ்ரீரங்கம் அஹோபில மடத்தில் கார்த்திகைமீ 5உ உத்திராட நக்ஷத்ரத்தன்று ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாசார்ய பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யாதி ஸகல கல்யாண குணாலங்க்ருதராய் ஸ்ரீ அஹோபில மடம் திவ்யாஸ்தாநத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ திவ்ய பாதுகா ஸேவக ஸ்ரீ வண்சடகோப ஸ்ரீ சடகோப ராமாநுஜ யதீந்த்ர மஹா தேசிகனுடைய திருநக்ஷத்ர மஹோத்ஸவத்தில், கார்த்திகைமீ 3உ ஞாயிற்றுக்கிழமை ஸாயம் 4½ மணிக்கு ஆரம்பித்து, 'தர்மமும் உலகமும்' என்கிற விஷயத்தை உபந்யஸித்தருளினார். திவான் பகதூர் ரிடையர்ட் ஜட்ஜ் ஸ்ரீமாந் ராகவய்யங்கார், ரிடையர்ட் ஸூப்ரண்டெண்டு ஸ்ரீமாந் நாராயணய்யங்கார் முதலான ப்ரபுக்களும், அநேகம் உத்யோகஸ்தர்களும், பல வித்வான்களும், மற்றும் அநேகம் மஹா ஜனங்களும் அநேகம் ஸ்த்ரீ ஜநங்களும் வந்திருந்து உபந்யாஸங்களைக் கேட்டு ஆநந்தித்தார்கள்.

கடைசி தினத்தில் அங்கு வந்திருந்த மஹா ஜநங்கள், ஆஶ்சர்யமான விஷயங்களைத் தாம் கேட்டு ஆநந்திக்கும்படி ஸ்ரீ அழகியசிங்கர் செய்தருளின மஹோபகாரத்திற்கு அநேகம் ப்ரணாமங்களை ஸமர்ப்பிக்கிறதாகவும், ஸ்ரீ அழகியசிங்கர் பல்லாண்டு பல்லாண்டுகளாக எழுந்தருளி யிருந்து இப்படி தர்ம ப்ரவர்த்தநங்களைச் செய்தருளும்படி ஸ்ரீரங்கநாதனையும் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனையும் ப்ராத்திக்கிறதாகவும் விண்ணப்பம் செய்துகொண்டார்கள். பிறகு ஸபை கலைந்தது.

Regd. No. M. 4437

(2)

ஸ்ரீ தேசிக ப்ரபந்த மஹோத்ஸவம்

தஞ்சை மாமணிக்கோயில் ஸ்ரீ நீலமேகப்பெருமாள் ஸந்நிதியில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகனுடைய ஸந்நிதியில், 1944ஹு டிஸம்பர்மீ 28, 29, 30-ம் தேதிகளில் ஸ்ரீ தேசிக ப்ரபந்த மஹோத்ஸவத்தை ஸ்ரீமான் ஸர். டி. விஜயராகவாசார்யர் அவர்கள் அக்ராஸநத்தின் கீழ் நடத்துவதாகப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. இவ் வுத்ஸவம் நடத்துவதின் நோக்கம், ஸ்ரீ தேசிகனுடைய ப்ரபந்த ஸ்ரீஸூக்திகளை ப்ரகாசப்படுத்துவதேயாகும். ஸ்ரீ திருவிண்ணகரப்பன் ஸந்நிதி ஸ்ரீ உ. வே. வங்கீபுரம் நவநீதம் ஸ்ரீராம தேசிகாசார்ய ஸ்வாமி, சென்ற பல வருஷங்களாகப் பல மஹா வித்வாங்களுடைய பேருதவியால் அரும்பாடுபட்டு எளிய தமிழ் நடையில் பதவுரை, கருத்துரை, விளக்கவுரை முதலியவற்றுடன் பதிப்பித்துவரும் ஸ்ரீ தேசிகப்ரபந்த ஸ்ரீ கோசம் பூர்த்தியாகி இவ் வுத்ஸவத்திலேயே அரங்கேற்றப்பெற்று வெளிவரப்போகின்றது. ஆஸ்திகர்கள் எல்லாரும் எழுந்தருளவேணுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

K. S. நரஸிம்மையங்கார், ஸபை கார்யதர்சி.

---

(3)

ஸ்ரீ கல்யாணபிவர்த்திநீ ஸபை, மதுராந்தகம்

ஷ ஸபையானது 3—9—44 மாலை 5-மணிக்கு வ்யாகரணாத்யாபகர் ஸ்ரீ உ. வே, M, S. நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி தலைமையில் வ்யாகரண சிரோமணி A. V. நரஸிம்மன் என்னும் வித்யார்த்தியால் "வேதம்" என்னும் விஷயத்தைக் குறித்தும், 16—11—44 மாலை 5-மணிக்கு வ்யாகரணாத்யாபகர் ஸ்ரீ உ. வே. P. N. ராகவாசார்ய ஸ்வாமி தலைமையில் வ்யாகரண சிரோமணி A. T. கல்யாணவரதன் என்னும் வித்யார்த்தியால், "ஶாஸ்த்ராப்யாஸம்" என்னும் விஷயத்தைக் குறித்தும் உபந்யாஸங்கள் செய்யப்பட்டன. ஷ ஸபையில் 3—9—44-ந் தேதி மாலை இக் கலாசாலைக்கு ப்ரின்ஸிபால் ஸ்வாமியாக எழுந்தருளி யிருக்கும் (வ்யாகரண சிரோமணி) ஸ்ரீமான் உ. வே. [illegible]வாசார்ய ஸ்வாமி ஸந்நிதிக்கு ஒரு ஸ்வாகத பத்ரிகையும் கொடுக்கப்பட்டது.

K. ராமாநுஜாசாரியர், கார்யதர்சி.

21/32

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

தாரண ஹு மார்கழி மீ

1உ	வெள்ளிக்கிழமை	...	ஸர்வ அமாவாஸ்யை : சூந்ய திதி: தாபரவி 12–22 [தநுர்மாஸாராதந ஆரம்பம்.]
2உ	சனிக்கிழமை	...	தாப சுக்ல ப்ரதமை திதி.
6உ	புதன்கிழமை	...	பஞ்சமி-ஷஷ்டி திதி த்வயம்.
7உ	வியாழக்கிழமை	...	ஸப்தமி திதி.
11உ	திங்கட்கிழமை	...	ஸர்வ (வைகுண்ட) ஏகாதசி.
15உ	வெள்ளிக்கிழமை	...	பௌர்ணமி * **சந்த்ர க்ரஹணம்.**
26உ	செவ்வாய்க்கிழவை	...	ஏகாதஶி திதி.
27உ	புதன்கிழமை	...	ஸர்வ ஏகாதஶி, த்வாதஶி திதி.
28உ	வியாழக்கிழமை	...	**ஸ்ரீ தொண்டரடிப்பொடிகள் திருநக்ஷத்ரம்.** த்ரயோதஶி திதி.
30உ	சனிக்கிழமை	...	ஸர்வ அமாவாஸ்யை : சாப மகர அமாவாஸ்யை திதி : மகர ரவி 33-15. போகிப் பண்டிகை.

---

* **சந்த்ர க்ரஹணம்**—தாரணஹு மார்கழிமீ 15உ (29-12-44) வெள்ளிக்கிழமை பூர்ணிமா திதி திருவாதிரை நக்ஷத்ரத்தில் ராத்ரி ஆக்நேய திக்கில் 8-4 (I.S.T.) மணிக்கு ஸ்பர்ஶம்; மத்ய காலம் 9-2; மோக்ஷ காலம் 10-2; ஆக ஆத்யந்த க்ரஹண காலம் 1-58 மணி. க்ரஹண பரிமாணம் காலே அரைக்கால்; பகல் 10-மணிக்குள் போஜநமும், பர்வ ஶ்ராத்தம் மறுநாளும் செய்யவேண்டும்.

Printed by K. Satakopachariar, at the Liberty Press, 10, Linghi Chetty Street. G.T., Madras.
Edited & Published by S. Vasudevachariar, 5, Ramaswami Street, Tyagarayanagar, Madras.

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அழகியசிங்கர் நியமநத்தால் மாதந்தோறும் ப்ரசுரமாகும்
ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை]

[ஸுபாநு — தாரண]

ஸம்புடம் - 3

ஸம்பாதகர்: வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்

: ப்ரசுரிக்குமிடம் :

நெ. 5, ராமஸ்வாமி தெரு, த்யாகராய நகர், சென்னை

லிபர்ட்டி அச்சகம், சென்னை.

1944

விஷய ஸூசிகை

[அகராதி]

ஸம்புடம் - 3

விஷயங்கள்	பக்கம்
அந்தப் பையன் கேட்ட கேள்வி	247, 255
அபிநவ யதிராஜ மங்களாஶாஸநம்	78
அம்ருதமும் 40-ம் பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் குமாரரும்	158
ஆத்ம குணம்	256
ஆழ்வான் ஸ்ரீஸூக்தி	123
உண்மை வைணவன்	51, 93, 119, 147, 179, 211, 239
உந்தி பறத்தல்	189, 215
எம்பெருமானின் அம்ஶாவேஶாவதாரங்கள்	46
கடோபநிஷத்தின் அர்த்த ஸங்க்ரஹம்	57
கருணையங் கண்ணன்	65
காக்கை கரைதல்	262
குஶல ப்ரார்த்தநம்	90
சந்தாதாரர்களுக்கு விஜ்ஞாபநம்	108, 140, 237, 260
திருப்பாவை	38, 126, 220
'தொல்லை யின்பத் திறுதி'	21
பஞ்சாங்க ஸங்க்ரஹம்	8, 42, 84, 122, 152, 178, 224, 250, 268, 276
மதிப்புரை — இராமாநுசன்	172
மந்வாதி ஸ்ம்ருதிகளின் அந்தரங்கக் கருத்து	161
மண் வியந்த மடமை	12
ஶபரீ	193
ஸத் ஸம்ப்ரதாய தீபம்	153, 174
ஸ்வப்நத்தின் தத்வம்	271
ஸாம்ய புத்தி	2, 81, 110
ஸீதா வியோகத்தின் சீர்மை	156
ஸ்ரீ அத்திப்பட்டு அழகியசிங்கர் ப்ரபாவம்	248, 257, 265, 273
ஸ்ரீ அஹோபில க்ஷேத்ரம் [நாடகம்]	16
ஸ்ரீ தேசிக வைபவம்	115, 225, 240
ஸ்ரீ பகவான் கல்கியின் உருவம்	55
ஸ்ரீ பகவத் விஷயம்	131
ஸ்ரீ மாலோலன் மஹிமை	43
ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் அடைக்கலப்பத்து	9
ஸ்ரீ விஶிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தின் பெருமை	47
ஷை வ்யாஸத்தில் ஒரு திருத்தம்	97
ஸ்ரீ வேங்கட வரதாசார்ய ஸ்வாமி	186
ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்	5, 85, 142, 206, 238, 245, 253, 261, 269
செய்திகள்	
ஆசார்யகுண தர்ப்பணம்	133
ஆசார்ய த்ரயம்	166
இவ் வர்ஷத்திய சந்த்ர க்ரஹணம்	229
கண்கொடுத்த வணிதத்தில் உத்ஸவம்	195

விஷயங்கள்	பக்கம்
கல்யாணாபிவர்த்தநீ ஸபா, மதுராந்தகம்	31, 72, 104, 266, 276
குளித்தலையில் ஸ்ரீ அழகியசிங்கர்	165
சிங்கநல்லூரில் ஸ்ரீ அழகியசிங்கர்	258
செஞ்சியில் ஸ்ரீ அழகியசிங்கர் விஜயம்	73
திருப்பதியில் திருப்பாவை காலக்ஷேபம்	72
திருப்புல்லாணியில் திருநக்ஷத்ர மஹோத்ஸவங்கள்	166
திருமலை உத்ஸவங்கள்	266
திருவெவ்வுளூர் ஶாஸ்த்ர பாடசாலை	135
திருவெவ்வுளூரில் ஹரி கதா காலக்ஷேபம்	267
தூசியில் நடந்த வைபவம்	89
தூசியில் ஸ்ரீ தேவராஜஸ்வாமி உத்ஸவம்	196
ப்ரஹ்ம வித்யாதிகாரம்	197
பம்பாய் - மாதுங்காவில் ஆசார்யோத்ஸவ வைபவம்	266
பாதூரில் ஸ்ரீ அழகியசிங்கரின் திருநக்ஷத்ரக் கொண்டாட்டம்	31
பாதூரில் ஸம்ப்ரோக்ஷண மஹோத்ஸவம்	241
பாதூர் ஸந்நிதியில் லக்ஷார்ச்சனை	252
மாலோல ஸதஸ், கொடியாலம்	98
ஸர்வ வ்யாக்யாநாதிகரண ஶங்கா பரிஹாரம்	230
36-ம் பட்டத்து ஸ்ரீ அழகியசிங்கரின் வர்ஷ திரு நக்ஷத்ர மஹோத்ஸவம்	250
40-ம் பட்டத்து ஸ்ரீ அழகியசிங்கரின் வார்ஷிக மஹாராதநம்	99
40-ம் பட்டத்து ஸ்ரீ அழகியசிங்கரின் உத்ஸவம் ...	198
41-ம் பட்டத்து ஸ்ரீ அழகியசிங்கரின் திருநக்ஷத்ர மஹோத்ஸவம்	68, 70
42-ம் பட்டத்து ஸ்ரீ அழகியசிங்கரின் திரு நக்ஷத்ர மஹோத்ஸவம்	100
42-ம் பட்டத்து ஸ்ரீ அழகியசிங்கரின் ஸ்ரீ ரங்கநாதன் மங்களாஶாஸநம்	103
ஸ்ரீ அண்ணாஸாமி ஐயங்கார் வித்வத் ஸபை	242
ஸ்ரீ அழகியசிங்கரின் திருவல்லிக்கேணி உபந்யாஸம்	32
ஸ்ரீ அழகியசிங்கரின் சுண்டப்பாளைய மங்களாஶாஸநம்	242
ஸ்ரீ ஆதிவண் ஶடகோப ஸ்வாமி திருநக்ஷத்ரம் ...	229
ஸ்ரீ திருக்குடந்தை அழகியசிங்கரின் திருநக்ஷத்ர மஹோத்ஸவம்	99
ஸ்ரீ தில்லஸ்தாநம் ஸ்வாமியின் 72வது திருநக்ஷத்ர மஹோத்ஸவம்	30
ஸ்ரீ தேஶிக ப்ரபந்த மஹோத்ஸவம்	276
ஸ்ரீநிவாஸ வள்ளல்	25
ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா	67
ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிக ஸபை, டெங்கிணிக் கோட்டை....	196
ஸ்ரீ பரவஸ்து ஸ்வாமியின் நிர்யாணம்	101
ஸ்ரீ புத்தங்கோட்டகம் ஸ்வாமி உபந்யாஸங்கள் ...	275
ஸ்ரீ மதுராந்தகம் பாடஶாலையின் அப்த பூர்த்தி	202
ஸ்ரீரங்கத்தில் நடந்த உபந்யாஸங்கள்	275
ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ மாணவர் ஸபை, சிங்கநல்லூர்	267

விஷயங்கள்	பக்கம்
ஸ்ரீ வேதாந்த தேசிக பக்த ஸபை, மதுரை	31
ஸ்ரீ வேதாந்த தேசிக ஸம்ப்ரதாய ஸுதாஸ்வாதிநீ ஸபா, திருப்பதி	71
ஸ்ரீ ஸந்நிதி திருவாராதநச் சுருக்கம்	250
ஸம்பாதகரின் குறிப்புக்கள்.	
அந்யாத்ருஶமான ஓர் ஸஹஸ்ரநாமார்ச்சனை	252
இவ்வர்ஷத்திய சாதுர்மாஸ்ய ஸங்கல்பம்	243
* உபநிஷத் பாகம்	108, 140
க்ருதி பஞ்சகம்	232
கலாசாலையின் அத்யக்ஷத்வமும் ஸ்ரீ ஸந்நிதி ஸ்ரீ கார்யமும்	259
காலத்தின் க்ரௌர்யம்	140
த்ரைவர்ணிக ஸ்த்ரீகளும் வித்யாஸ்தாநங்களும்	233
திருப்பதி தேவஸ்தாநம்	136
திவ்ய ப்ரபந்தாத்யயநமும் ப்ரம்ஹ வித்யாதிகாரமும்	169
நாஸ்திக்யத்தின் வளர்ச்சி	35
பம்பாயில் தீவிபத்	168
மாலோல ஸதஸ்ஸும் ஸ்ரீ அழகிய சிங்கரின் திருநக்ஷத்ரமும்.	74
மாலோலன் மஹிமை	76
ராவ் கமிட்டி ஹிந்துச் சட்டபில்	260
ராஜாங்கத்தாரின் தர்ம சிந்தை	199
ஶோசநீயமான சில ஸம்பவங்கள்	108
ஹிந்து மதத்தின் அஸாதாரணக் கொள்கை	75
ஸ்த்ரீகளும் வித்யா ஸ்தாநங்களும்	251
ஸர்வ வ்யாக்யாந அதிகரணத்தில் ஒரு ஶங்கை	200
ஸர்வ வ்யாக்யாந அதிகரணம்—ஸ்த்ரீ தர்மம்	243
ஸ்ரீ அழகியசிங்கரின் யாத்ரை 34, 139, 168, 231, 259,	267
ஸ்ரீ அழகியசிங்கரின் ஸ்ரீ ரங்கநாதன் மங்களாஶாஸநம்	107
ஸ்ரீ கார்யம் ஸ்வாமியின் நிர்யாணம்	251
ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியை	34
ஸ்ரீ தேசிக ப்ரபந்த உத்ஸவம்	268
ஸ்ரீமத் பரகால ஸ்வாமியின் ஷஷ்ட்யப்த பூர்த்தி	251
ஸ்ரீ மதுராந்தகம் பாடசாலையின் முதல் அப்த பூர்த்தி மஹோத்ஸவம்	105
ஸ்ரீ மதுராந்தகம் ஸம்ஸ்க்ருத பாடசாலை 167, 244,	236
ஸ்ரீ வில்லிவலம் ஸ்வாமியின் பகவத் விஷயம்	171
ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய ஸஞ்சாரம்	199

* இவ்வர்ஷத்து 2-ம் ஸஞ்சிகையோடு கடோபநிஷத் முற்றுப்பெற்றுள்ளது. 4-வது 5-வது ஸஞ்சிகைகளில் ஈஶாவாஸ்யோபநிஷத்தில் சில விசேஷ விஷயங்களும், 6-வது 7-வது ஸஞ்சிகைகளில் ப்ரஶ்நோபநிஷத்தில் சில பாகங்களும் வெளிவந்திருக்கின்றன. காகிதப் பஞ்சம் நீங்கி ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியை தன் பூர்ண ரூபத்துடன் வெளிப்படும்போது ப்ரஶ்நோபநிஷத்தின் தொடர்ச்சியும் மற்றை உபநிஷத்துக்களும் வெளியிடப்படும்.